JUDICIAL FORM NO.53
JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

CC. No. 64/2025 Crime No. 30/2024 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW–1–கௌரி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தாளக்குட்டைப்புதூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். தேதி நினைவில்லை, கடந்த ஆண்டு, ஜனவரி மாதம் மதியம் சுமார் 02.30 மணியளவில் எனது 9 ஆடுகள் மற்றும் 4 மாடுகளை வேம்பத்து ஏரியில் மேய்த்து விட்டு, ஏரிக்கரை ஓரத்தில் உள்ள எனது தோட்டத்தில் அமைந்துள்ள கட்டு தரையில் கட்டிவிட்டு மதிய உணவிற்காக வீட்டிற்கு சென்று விட்டேன். பிறகு மதியம் 03.30 மணிக்கு திரும்பி கட்டுத்தரைக்கு வந்து மீண்டும் மேய்ச்சலுக்காக ஆடு மாடுகளை அவிழ்த்து விட பார்த்தபோது ஒரு பெரிய செம்மறி கிடாய் காணவில்லை. பிறகு நானும், எனது கணவரும் கட்டியிருந்த கிடாயை அவிழ்த்துக்கொண்டு மேய்ச்சலுக்கு எங்காவது சென்று விட்டதா என்று அக்கம் பக்கம் முழுவதும் தேடிப் பார்த்தோம். பிறகு எங்கள் தோட்டத்தில் சீமார் உரித்து கொண்டு இருந்த கருவாயன் என்கிறவரிடம் ஆடு காணாமல் போனது குறித்து கேட்டதற்கு அவர் மதியம் சுமார் 03.30 மணியளவில் அங்கு இரண்டு நபர்கள் ஸ்கூட்டியில் வந்ததாகவும், தன்னிடம் வந்து ஈக்குமாறு கேட்டதாகவும், அதற்கு தான் ஒரு பிடி ஈக்குமாறு கொடுத்ததாகவும், அதற்கு அவர்கள் ரூ.500/–கொடுத்ததாகவும், அதற்கு அவர் தன்னிடம் சில்லறை இல்லை என்று கூறியதாகவம், வந்த இரண்டு நபர்களும் மீண்டும் ஒரு பிடி ஈக்குமாறு கேட்டதாகவும், அதற்கு அவர் சென்று அந்த ஈக்குமாறை எடுத்து வருவதற்குள் அந்த இரு நபர்களும் தாங்கள் வந்த ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு சென்று விட்டதாகவும் கூறினார். அவர் அந்த மேற்படி இரண்டு நபர்கள் தான் கிடாயை அவிழ்த்துக்கொண்டு சென்றிருப்பார்கள் என்று யூகித்துக் கூறினார். அவர் அந்த மேற்படி இரண்டு நபர்கள் தான் கிடாயை அவிழ்த்துக் கொண்டு சென்றிருப்பார்கள் என்று யூகித்துக் கூறினார்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.11 19:17:29 +0530

மறுநாளே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பிறகு காணாமல்போன கிடாய் அருகில் உள்ள சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்திருக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நாங்கள் சந்தை முழுவதும் சென்று தேடிப் பார்த்தோம். அப்போதும் எங்களது கிடாய் கிடைக்கவில்லை. அதன் பிறகு ஒரு 8 – 10 நாட்கள் கழித்து மீண்டும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் ஆகும். எனது கணவர் தான் புகார் அளித்தார். பின்னர் எனது ஆடு கிடைத்துவிட்டதாக எனது கணவருக்கு தகவல் கிடைத்தது அவர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த ஆட்டை பெற்றுக் கொண்டார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆடு தான் திருட்டுப் போன எனது ஆடு ஆகும். **அந்த புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆடு காணாமல் போன மறுநாள் எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். காவல் நிலையத்திற்கு நான் அவருடன் செல்லவில்லை என்றால், சரியல்ல. நானும் கூட சென்றேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் தான் எழுதிக் கொடுத்தார்கள்.

போலீசார் என்னிடம் எழுதி கையொப்பம் கேட்டார்கள் என்றால், சரிதான். நான் ஆடு காணாமல்போனது தொடர்பாக சம்பவம் நடந்து மறுநாள் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால், விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை.

நான் போலீஸ் விசாரணையில் எத்தனை ஆடுகள் மற்றும் மாடுகள் கட்டி வைத்து விட்டு சென்றேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:17:35 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC. No. 64/2025 Crime No. Station Bhavani

| | | |
|---|---|---|
| Name | PW–2–கருவாயன் (எ) ராசு | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of November 2025 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் வேம்பத்தியில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மதியம் சுமார் 3.00 மணியளவில் நான் வேம்பத்தி ஏரிக்கரையோரம் அமர்ந்து ஈக்குமாறு கிழித்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு இரண்டு நபர்கள் ஸ்கூட்டியில் வந்தார்கள். அவர்கள் என்னிடம் வந்து ஈக்குமார் எவ்வளவு என்று கேட்டார்கள். நான் பி ரூ.50/– என்று கூறினேன். அவர்கள் ஒரு பிடியை வாங்கிக் கொண்டு ரூ.100/– கொடுத்தார்கள். நான் சில்லறை இல்லை என்று கூறினேன். பிறகு அவர்கள் என்னிடம் ரூ.500/– பணம் கொடுத்தார்கள். என்னிடம் சில்லறை இல்லை என்று நான் கூறினேன். நான் பக்கத்து வீட்டில் சில்லரை வாங்குவதற்காக சென்றுவிட்டேன். நான் சில்லரை வாங்குவதற்காக சென்று விட்டு ஒரு அரை மணி நேரம் கழித்து திரும்பி வந்து பார்த்தபோது நான் கொடுத்த சீமார் கீழே கிடந்தது. அங்கே வந்த இரண்டு நபர்களையும் காணவில்லை. அவர்கள் வந்து ஸ்கூட்டியும் அங்கு இல்லை. அருகிலிருந்த செல்வராசுக்கு சொந்தமான கட்டுத்தரையிலிருந்து ஒரு கிடாயையும் காணவில்லை. நான் சந்தேகப்பட்டு அவர்களிடம் இரண்டு நபர்கள் ஸ்கூட்டியில் வந்ததாகவும், அவர்கள் என்னிடம் சீமார் வாங்கியதாகவும், சில்லறைக்காக நான் பக்கத்து தோட்டத்திற்கு சென்று வருவதற்குள் சீமாரை அங்கே போட்டுவிட்டு அவர்கள் சென்று விட்டதாகவும். அப்போதுதான் கிடாயை காணவில்லை என்றும் கூறினேன். பிறகு அக்கம் பக்கம் எங்கு தேடி பார்த்தும் கிடாய் கிடைக்கவில்லை. மேற்படி இரண்டு நபர்களையும் பார்த்து 2–3 வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது என்னால் அவர்களை சரியாக அடையாளம் காட்ட இயலாது. கிடாய் காணாமல்போனது தொடர்பாக போலீசில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:17:42 +0530

புகார் கொடுத்துள்ளதாக கேள்விப்பட்டேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் செல்வராஜ் அவர்களின் தோட்டத்தில் எத்தனை வருடங்களாக நான் வேலை செய்து வருகிறேன் என்றால், 40 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். சம்பவ தினத்தன்று நான் செல்வராஜ் அவர்களின் தோட்டத்திற்கு வேலைக்கு செல்லவில்லை என்றால், சரிதான்.

சம்பவ தினத்தன்று என்னிடம் சீமார் வாங்கியவர்கள் அதற்கு பணம் கொடுத்தார்களா என்றால், பணம் ரூ.500/- மற்றும் ரூ100/- ரூபாய் கொடுத்தார்கள். கிடாய் காணாமல்போனது தொடர்பாக நான் உடனே செல்வராஜ் அவர்களிடம் தகவல் தெரிவித்தேனா என்றால், தகவல் தெரிவித்தேன். நான் சொல்லித்தான் செல்வராஜ் அவர்களுக்கு கிடாய் காணாமல்போனது தொடர்பாக தெரியும் என்றால், சரிதான். அதன் பின்பு தான் அவர்கள் சம்பவயிடம் வந்தார்கள் என்றால், சரிதான்.

சம்பவ தினத்தன்று செல்வராஜ் அவர்களுடன் அவரது மனைவி உடன் வந்தாரா என்றால், உடன் வந்தார். நான் சீமார் உரித்துக் கொண்டிருந்த இடத்தில் அக்கம் பக்கத்தில் வீடுகள் எதுவும் இல்லை என்றால், சரிதான். சிறிது தள்ளி அரை கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. நான் சில்லறை வாங்கிவிட்டு எத்தனை மணி நேரம் கழித்து மீண்டும் வந்தேன் என்றால், அரை மணி நேரம் இருக்கும்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் இந்த வழக்கின் புகார்தாரரின் தோட்டத்தில் வேலை செய்து வருகிறேன் என்றாலும், அதை மாற்றி நான் சீமார் வித்து வருவதில்லை என்றாலும், நான் சில்லறைக்காக வெளியே சென்று வந்தேன் என்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:17:49 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC. No. 64/2025 Crime No. Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW−3−அருள்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மாக்கல்புதூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை கடந்த 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் தாளக்குட்டைப்புதூர், ஒட்டன் தோட்டம் அருகில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் ஒட்டன் தோட்டம் செல்வராஜ் ஆடு திருட்டுப்போனது தொடர்பாக விசாரித்து படம் வரைந்து கொண்டு இருந்தார்கள். அப்போது சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நானும் என்னுடன் இருந்த தமிழரசு என்பவரும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையொப்பம் தமிழரசினுடையது. **பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் செல்வராஜ் எனது உறவினர் என்றால், சரிதான். எனது மாமா உறவு முறை முறையாகும். என்னுடன் கையொப்பம் செய்த தமிழரசு என்பவரும் எனது உறவினர் என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:17:57 +0530

செய்துவிட்டு. சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:18:03 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.